# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

**ஆணை எண்: 242/மா/2024**

**நாள்: 25.03.2025**

| | | |
|---|---|---|
| திரு. P. பெருமாள்<br>திண்டுக்கல் | --- | முறையீட்டு மனுதாரர் |
| ஆணையர்<br>திண்டுக்கல் மாநகராட்சி<br>திண்டுக்கல் | --- | எதிர்மனுதாரர் |

திண்டுக்கல்–624 001, செல்லாண்டியம்மன் கோவில் வடக்குத் தெரு என்கிற முகவரியில் வசிக்கும் திரு.P.பெருமாள் என்பவரின் 17.11.2024 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 18.11.2024 அன்று பெறப்பட்டு 242/மா/2024 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது:

**ஆணை**

திண்டுக்கல்–624 001, செல்லாண்டியம்மன் கோவில் வடக்குத் தெரு என்கிற முகவரியில் வசிக்கும் திரு. P. பெருமாள் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 17.11.2024 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்ட புகாரினை தெரிவித்துள்ளார்:-

> “திண்டுக்கல் மாநகராட்சியில் ஓய்வு பெற்று ஓய்வூதியம் வழங்கியதில் 7வது ஊதியக் குழு ஓய்வூதியம் முறையாக கணக்கிடாமல் 2018 வரை மட்டும் ஓய்வூதியம் தரப்பட்டுள்ளது. ஓய்வு பெற்றது 2020ம் ஆண்டு வரை கணக்கிட வேண்டும். மாநகராட்சி தீர்வு தர அறிவுறுத்த வேண்டும்.
>
> மருத்துவ காப்பீடு அட்டை 4 ஆண்டுகளாக தராததால் என் மனைவி இருதய சிகிச்சைக்கு 2 லட்சம் வரை கடன் பெற்று சிகிச்சை தரப்படுகிறது. இதை மாநகராட்சி பெற்றுத் தர வேண்டும்.
>
> தாங்கள், தாக்கல் செய்யப்படும் விண்ணப்பம் ஏற்று மாநகராட்சியை விசாரணை செய்து எனக்கு தீர்வு தர பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.”

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 16.12.2024 நாளிட்ட அறிவிக்கை மூலம் திண்டுக்கல் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் தனது 12.02.2025 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:

"(அ) அரசாணை எண்.303 நிதி (ஊதிய பிரிவு) துறை, நாள் 11.10.2017–ன்படி இப்பணியாளருக்கு பணி காலத்திலேயே 01.01.2016 முதல் கருத்தியலாகவும் 01.10.2017 முதல் பணப்பயனுடனும், அதனை தொடர்ந்து வருடாந்திர ஊதிய உயர்வுகளும் அனுமதித்து வழங்கப்பட்டு வந்தது. அதன் பின்னர் அன்னார் 31.08.2020 அன்று ஓய்வு பெற்றதை தொடர்ந்து உதவி இயக்குநர், மாநகராட்சி தணிக்கை துறை, திண்டுக்கல் மாநகராட்சி அவர்களால் வழங்கப்பட்ட ஓய்வூதிய சான்றின்படி ஓய்வூதியமும் வழங்கப்பட்டு வருகிறது என்ற விவரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

(ஆ) மேலும், புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள மருத்துவ காப்பீடு அட்டை குறித்த விபரம் கோரியதில் மனுதாரரால் நாளது தேதி வரை காப்பீடு அட்டை வழங்க கோரி உரிய படிவம் ஏதும் இம்மாநகராட்சியில் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதை ஒப்புக்கொண்டார். எனவே அன்னார் உரிய படிவத்தில் புகைப்படத்துடன் கூடிய விபரங்கள் சமர்ப்பிக்கும் பட்சத்தில் மருத்துவ காப்பீடு அட்டை பெற்றுத் தரப்படும் என்ற விபரம் சமர்ப்பிக்கப்படுகிறது." என தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 13.02.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 05.02.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 13.02.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

"நான் திண்டுக்கல் மாநகராட்சியில் தூய்மைப் பணியாளராக பணி செய்து வயது முதிர்வு காரணமாக 31.08.2020 அன்று ஓய்வு பெற்றேன். ஓய்வு பெற்று ஓய்வூதியம் வழங்கியதில் 7வது ஊதியக்குழு ஓய்வூதியம் எனக்கு முறையாக கணக்கிடாமல் 2018 வரை மட்டும் ஓய்வூதியம் தரப்பட்டுள்ளது. நான் ஓய்வு பெற்ற 2020–ம் ஆண்டு வரை கணக்கீட்டு வழங்க வேண்டும். ஓய்வூதிய பணப்பலன்கள், நிலுவைத் தொகை வழங்க வேண்டும்.

மேலும் எனக்கு மருத்துவ காப்பீடு அட்டை 4 ஆண்டுகளாக வழங்காததால் என் மனைவி இருதய சிகிச்சைக்கு ரூ.2 இலட்சம் வரை கடன் பெற்று சிகிச்சை அளித்தேன். திண்டுக்கல் மாநகராட்சி அலுவலர்கள் தெரிவித்தவாறு மருத்துவ காப்பீடு தொடர்பாக உரிய விண்ணப்பத்தினை திண்டுக்கல் மாநகராட்சி அலுவலகத்தில் விரைவில் சமர்ப்பிக்கிறேன் என்று இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

6. திண்டுக்கல் மாநகராட்சியின் உதவியாளர் 13.02.2025 அன்றைய விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

"மனுதாரர் மனு தொடர்பாக அரசாணை எண்.303 நிதி (ஊதிய பிரிவு) துறை, நாள் 11.10.2017–ன்படி இப்பணியாளருக்கு பணி காலத்திலேயே 01.01.2016 முதல் கருத்தியலாகவும் 01.10.2017 முதல் பணப்பயனுடனும் அதன் பின்னர் அன்னார் 31.08.2020 அன்று ஓய்வு பெற்றதை தொடர்ந்து உதவி இயக்குநர், மாநகராட்சி தணிக்கை துறை, திண்டுக்கல் மாநகராட்சி அவர்களால் வழங்கப்பட்ட ஓய்வூதிய சான்றின்படி தகுதி காண் பணியான 25 வருடம் 7 மாதம் 5 நாளுக்கு உரிய ஓய்வூதியமும் வழங்கப்பட்டு வருகிறது என்ற விவரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

மேலும், புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள மருத்துவ காப்பீடு அட்டை குறித்த விபரம் கோரியதில் மனுதாரரால் நாளது தேதி வரை காப்பீடு அட்டை வழங்க கோரி உரிய படிவம் ஏதும் இம்மாநகராட்சியில் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதை ஒப்புக்கொண்டார். எனவே அன்னார் உரிய படிவத்தில் புகைப்படத்துடன் கூடிய விபரங்கள் சமர்ப்பிக்கும் பட்சத்தில் மருத்துவ காப்பீடு அட்டை பெற்றுத் தரப்படும் என்ற விபரம் மாண்புமிகு இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

7. மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம் மற்றும் திண்டுக்கல் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் உதவியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறை மன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

மனுதாரர் திண்டுக்கல் மாநகராட்சியில் தூய்மைப் பணியாளராக பணி செய்து வயது முதிர்வு காரணமாக **31.08.2020** அன்று ஓய்வு பெற்று, ஓய்வூதியம் வழங்கியதில் 7வது ஊதியக்குழு ஓய்வூதியம் முறையாக கணக்கிடாமல் 2018 வரை மட்டும் ஓய்வூதியம் தரப்பட்டுள்ளது எனவும், தான் ஓய்வு பெற்ற **2020**–ம் ஆண்டு வரை கணக்கீட்டு ஓய்வூதிய பணப்பலன்கள், நிலுவைத் தொகை வழங்கக் கோரியுள்ளார். மேலும், திண்டுக்கல் மாநகராட்சியில் மருத்துவ காப்பீடு அட்டை தொடர்பாக விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கவும் இசைவு அளித்துள்ளார்.

அரசாணை எண்.303 நிதி (ஊதிய பிரிவு) துறை, நாள் **11.10.2017**–ன்படி மனுதாரருக்கு பணிக் காலத்திலேயே **01.01.2016** முதல் கருத்தியலாகவும் **01.10.2017** முதல் பணப்பயனுடனும் அதன் பின்னர் அன்னார் **31.08.2020** அன்று ஓய்வு பெற்றதை தொடர்ந்து உதவி இயக்குநர், மாநகராட்சி தணிக்கை துறை, திண்டுக்கல் மாநகராட்சி அவர்களால் வழங்கப்பட்ட ஓய்வூதிய சான்றின்படி தகுதி காண் பணியான **25** வருடம் **7** மாதம் **5** நாளுக்கு உரிய ஓய்வூதியமும் வழங்கப்பட்டு வருகிறது என்பதும், மருத்துவ காப்பீடு அட்டை குறித்து மனுதாரரால் நாளது தேதி வரை காப்பீடு அட்டை வழங்க கோரி உரிய படிவம் ஏதும் திண்டுக்கல் மாநகராட்சியில் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதும், அன்னார் உரிய படிவத்தில் புகைப்படத்துடன் கூடிய விபரங்கள் சமர்ப்பிக்கும் பட்சத்தில் மருத்துவ காப்பீடு அட்டை வழங்கப்படும் என திண்டுக்கல் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் உதவியாளரின் வாக்குமூலம் ஆகியவற்றின் மூலம் அறிய முடிகிறது.

எனவே, மனுதாரர் மருத்துவ காப்பீடு அட்டை தொடர்பாக உரிய விண்ணப்பத்தினை திண்டுக்கல் மாநகராட்சி அலுவலகத்தில் சமர்ப்பிக்க இம்முறை மன்ற நடுவம் அறிவுறுத்துகிறது. அவ்வாறு மனுதாரரால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பத்தின் மீது விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு ஆணையிடுமாறு, திண்டுக்கல் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறை மன்ற நடுவம் ஆணையிடுகிறது.

**2025**-ஆம் ஆண்டு மார்ச் **25**-ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு.P. பெருமாள்
செல்லாண்டியம்மன் கோவில் வடக்குத் தெரு,
திண்டுக்கல்–**624 001**.

2) ஆணையர்,
திண்டுக்கல் மாநகராட்சி,
திண்டுக்கல்–**624 001**.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

4) இணை இயக்குநர், ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.